# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.466/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்வம் | த-பெ | சேதுபதி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 61/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.03.2026**

**1 மற்றும் 8 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

<u>குறுக்கு விசாரணை.</u>

1. புகார் கொடுத்தது யார் என்றால் லூயி ராஜா. அசாஆ 1 ஆவணத்தின் பின் பக்கத்தில் புகாரை பெற்று கொண்டு 14.30 மணிக்கு வழக்கு பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரம் 14.30 என்பது 14.00 மணி என குறிப்பிடப்பட்டு திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக புகாரை பெற்றால் முதல் நிலை விசாரணை செய்த பின்பு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் கொடுத்த காவல் துறையில் பணிபுரியும் லூயிஸ் ராஜா என்பவர் பணியில் இருக்கும்போது புகார் அளித்தார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ 3 ஆவணம் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நேரம் 14.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் துறையில் பணிபுரியும் நபர் கொடுத்த புகார் என்பதால் எந்த விதமான முன் விசாரணையும் செய்யாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் நான் ஆய்வாளரிடம் கேட்டேன் நீ முதல் தகவல் அறிக்கை பதிவு செய் மற்றதை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னதால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2. எதிரிகள் சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தன்று காரைக்குடி பாண்டியன் தியேட்டரில் அனுமதி பெற்று வைத்த பிளக்ஸ் பேனர்களை புகார் கொடுத்த லூயிஸ் ராஜா மற்றும் குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள காவலர்கள் வேண்டுமேன அற்புறப்படுத்தியதை காவல் துறையை

எதிர்த்து கேள்வி கேட்டதால் காவல் துறையை யாரும் எதிர்த்து கேள்வி கேட்கக்கூடாது என்று அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக கொடுத்த பொய் புகாரை எவ்வித முன் விசாரணையும் செய்யாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொன்னது போல் எந்த விதமான வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 10:26:45 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.